[23rd August 1961

SRI M. KALYANASUNDARAM : கனம் தலைவர் அவர்களே, நான் என்னுடைய தீர்மானத்தில் போதுமான முன்னேற்பாடாக, பாதுகாப்பான நடவடிக்கைகளை வெள்ள சமயத்தில் மராமத்து இலாகா எடுத்துக்கொள்ளவில்லை என்பதைப்பற்றி குறிப்பிட்டேன். அவர்கள் என்ன என்ன செய்யத் தவறினார்கள், அல்லது செய்தார்கள் என்பதைப்பற்றி கனம் அமைச்சர் அவர்கள் ரூல் 41-படி ஒரு ஸ்டேட்மெண்ட் வைத்திருக்கவேண்டும். இல்லாவிட்டால் இந்த மோஷனை அனுமதித்திருக்க வேண்டாம். சபையில் ஒரு ஸ்டேட்மெண்டு வைத்திருக்கிறேன் என்றால் அதில் நான் குறிப்பாகக் கேட்டுள்ள விஷயங்கள் இருக்கலாம், அல்லது இல்லாமலும் இருக்கலாம். இன்னும் அதைப் படிக்கவில்லை. ஆகவே தனியாக இதற்கு ஒரு ஸ்டேட்மெண்டு வைப்பதில் என்ன கஷ்டம்?

THE HON. SRI P. KAKKAN: எதிர்கட்சித் தலைவர்கள் எல்லோரும் ஒன்று கூடிப் பேசிய பின்னர்தான் இந்த ஏற்பாட்டுக்கு வந்துள்ளோம்.

DEPUTY SPEAKER : That is the reply of the Hon. Minister.

III—GOVERNMENT MOTION.

TRANSACTION OF GOVERNMENT BUSINESS ON A NON-OFFICIAL DAY.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I move—

"That rule 23 of the Madras Legislative Assembly Rules be suspended and the House do transact Government Business on Thursday, the 24th August 1961."

The motion was put and carried.

IV.—GOVERNMENT BILL.

THE MADRAS CO-OPERATIVE SOCIETIES BILL, 1961 (L.A. BILL NO. 22 OF 1961) AS AMENDED BY THE SELECT COMMITTEE—*cont.*

9-30 a.m. DEPUTY SPEAKER : Now let us proceed with the Madras Co-operative Societies Bill. We will take up clause 64, Chapter VIII.

Clause 64.

DEPUTY SPEAKER : The question is—

'That clause 64 do stand part of the Bill.'

SRI M. KALYANASUNDARAM : இது ஆடிட், என்கொயரி, இன்ஸ்பெக்ஷன் முதலியன சம்பந்தமான ஒரு பகுதி. பழைய சட்டத்திலே பிரபல்யமாக இருந்த 38-வது பிரிவு இப்பொழுது 65-வது பிரிவாக இந்த மசோதாவில் உருவாகியிருக்கிறது. இதற்கு முன்னதாக வருஷா வருஷம் செய்யவேண்டிய ஆடிட் முறையாக நடை பெறவேண்டும். இதிலே ஒரு காலம் குறிப்பிடப்பட வேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆடிட் முடிவு பெறுவதற்கு ஒரு காலவரையரை இல்லாமல் இருக்கிறது.